நீச்சல் வீராங்கனை செல்வி சுவாதி | தமிழ்ச் சான்றோர் பொள்ளாச்சி திரு. தருமராசு ஐயா | மகாப்பெரியவரின் சந்திரமௌலி பூஜை

ரூ.20/- | செப்டம்பர் 2020 புரட்டாசி | தீபம்: 8 ஒளி: 9

24 மனை

குலமுரசு

தமிழ் மாத இதழ்

நலங்கள் அருளும் நவராத்திரி


SRI VEERA'S GROUP
SRI VEERA'S CREATIONS
பல ஜவுளி கடை முதலாளிகளை உருவாக்கும் ஒரே ஸ்தாபனம்
ஸ்ரீ வீராஸ் கிரியேஷன்ஸ்
SRI VEERA'S CREATIONS
(Silks, Textiles & Readymade collections)
மொத்த விலை ஷோரூம்
Wholesale showroom
2 Wheeler & Car Parking வசதியுடன்
எண். 51-52/1, M.C. ரோடு, சென்னை - 600 021.
போன் : 2590 1771, 2590 1772, 2590 1773, 2590 1774

24 மனை குலமுரசு

தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2013/48200

தீபம்: 8 ஒளி: 9

செப்டம்பர் 2020 புரட்டாசி

24 மனை தெலுங்கு செட்டியார்கள் இனமக்களுக்காக
24 மனை தெலுங்கு செட்டியார்கள் சேரிட்டபிள் டிரஸ்ட்
அறக்கட்டளையால் நடத்தப்படும் அரசியல் சார்பற்ற சமூக மாத இதழ்
24 மனை தெலுங்கு செட்டியார்கள் தலைமைச் சங்கம்
கீழ்ப்பாக்கம், சென்னை - 600010.

சிறப்பாசிரியர்:
கரூர் கே.சி.பழனிசாமி
Ex.MP., Ex.MLA.,

ஆசிரியர்:
Dr. துரை அங்குசாமி
M.A.,B.L.S.,B.Ed.,Ph.D.,

40 லட்சம் மக்களின் நாடித்துடிப்பு
24 மனை குலமுரசு மாத இதழ்

ஆண்டுச் சந்தா ரூ. 200/-

ஆண்டு சந்தா செலுத்தும் முறை

Account Name : 24 MANAI KULAMURASU
Bank Name : CANARA BANK
Branch : CHENNAI KILPAK
Account Number : SB. A/c. 1650101014869
IFSC CODE : CNRB0001650

மேற்கண்ட வங்கிக் கணக்கில் ஆன்லைன் மூலம் ரூ.200/- செலுத்தி அதன் பரிவர்த்தனை விபர ஸ்கிரீன்ஷாட்-ஐ 9965 900 990 என்ற வாட்ஸ்அப் (அ) kulamurasuoffice@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் முகவரி மற்றும் செல்போன் எண் குறிப்பிட்டு அனுப்பவும். கனரா வங்கியில் செலான் மூலம் பணமாக செலுத்துவோர் சந்தா ரூ.200 + வங்கி சேவைக் கட்டணம்+GSTவரி ரூ.60 சேர்த்து ரூ.260/-ஐ கனரா வங்கிக் கணக்கில் செலுத்தி, கௌண்டர் ஃபைல் ரசீது நகலுடன் உங்கள் முகவரி எழுதி மின்னஞ்சல் (அ) வாட்ஸ்அப் (அ) தபாலில் அனுப்பவும்.

24 மனை குலமுரசு,
330/1, சின்னாண்டான் கோவில் வீதி,
கரூர் - 639001.

Customer Care Cell: 9965 900 990
E-Mail: kulamurasuoffice@gmail.com
Ph: 04324-240663 - K.C.S.R.சிவக்குமார்

முன்னோட்டம்..

நலங்கள் அருளும் நவராத்திரி — 05

நம் இன நீச்சல் வீராங்கனை செல்வி. சுவாதி — 08

தமிழ்ச் சான்றோர் பொள்ளாச்சி திரு. தருமராசு ஐயா — 14

மகாபெரியவா அவர்களின் சந்திரமௌலி பூஜை — 20

புதிய வரன்களுடன் மணக்கோலம் — 31

புதிய சந்தா பதிவு செய்தல், புதுப்பித்தல், முகவரி மாற்றம் மற்றும் மணக்கோலம் பகுதியில் சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய தொடர்பு கொள்ளவேண்டிய செல்பேசி/வாட்ஸ்ஆப் எண்:

99 65 900 990

(காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை)

Scan & Save Contact

24manaikulamurasu 99 65 900 990

மின்இதழ் படிக்க மற்றும் மணக்கோலம் பதிவு செய்ய: https://kulamurasu.blogspot.com

Gujan's PARIPALANA RETIREMENT COMMUNITY
GUJAN'S
PARIPALANA - PHASE II
Retirement Community
Sri Veeramathi Amman INFRA DEVELOPER PVT. LTD.
Comfortable Homes for Retired living Near Vadavalli.
First Phase of 92 Units already functioning smoothly Since July 2017.
Second Phase of 1, 2, 3 BHK Flats under Construction near
Bharathiya Vidhya Bhavan School , Ajanoor Road, Vadavalli, Coimbatore.
* Bring back the Memories of Time gone by...
Common Vegetarian Dining, Cultural & Religious Activities including
Regular Music Concerts , Comprehensive Medical Care,
Indoor Game Activities, Mini Gym for Seniors, Guest Rooms & Library.
* SERVICE PROVIDER- PARIPALANA CAFE
For Booking Call :
87540 44116
87540 44881
81100 42393
No : 4, Gandhi Layout,
Maruthamalai Main Road,
Coimbatore - 46.
svaconstructions@yahoo.co.in
srigujanbuilder@gmail.com
www.gujanparipalanaseniorliving.com
TN/11/BUILDING/0045/2019
Dated on 29.03.2019
RERA APPROVED

நலங்கள் அருளும் நவராத்திரி

சாக்த வழிபாடு என்பது சக்தியை, அம்பிகையை, அகிலாண்ட நாயகியை, அன்னை பராசக்தியை வழிபடும் பண்டிகைகளில் முக்கியமானது ஒன்பது நாட்கள் கொண்டாடப்படும் மிகச் சிறப்பு வாய்ந்த நவராத்திரி விழாதான்.

புரட்டாசி மாதத்தில் வரும் அமாவாசைக்கு அடுத்த நாளான பிரதமை முதல் நவமி வரை மாலை வேளைகளில் அம்பிகையின் பல வடிவங்களை வழிபடுவது நவராத்திரி வழிபாடாகும்.

நவமி அன்று சரஸ்வதி பூஜை.

ஆயுத பூஜை என்றும் அழைக்கப்படும். நாம் செய்யும் செயல்கள், தொழில்கள் அனைத்திற்கும் அதிபதி சரஸ்வதி. ஆகவே அன்று வீட்டிலுள்ள கருவிகள், எழுதுகோல்கள், புத்தகங்கள் அனைத்தையும் அழகுற அமைத்து, சரஸ்வதி தேவியின் அருளைப் பெறுகின்ற நிகழ்ச்சியாக நடைபெறும். அன்று அடுக்கிவைக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் ஆயுதங்களை அன்றே உபயோகிக்காமல் மறுநாள் விஜயதசமி அன்று எடுக்கப்பட்டு உபயோகப்படுத்தப்படும்.

விஜயதசமி - வெற்றி தரும் பத்தாம் நாள்.

பூஜிக்கப்பட்ட கருவிகள், எழுதுகோல்கள், புத்தகங்கள் அனைத்தும் மறுநாள்தான் எடுத்தாளப்படும். விஜயதசமி அன்று துவங்கப்படும் எந்தக் காரியமும் மிக வெற்றிகரமாக அமையும். அன்றுதான் குழந்தைகளுக்கு வித்யா உபதேசம் எனும் அக்ஷராப்யாசம் என்னும் கல்வி கற்கத் தொடங்க அற்புதமான நாளாகும்.

வீட்டில் பத்து நாட்கள் கொண்டாடப்படும் விழாவாக நவராத்திரி, தவிர வேறு விரத விழா இல்லை. வீட்டில் கொண்டாடப்படும் இந்த விழா வீடு என்ற கோயிலுக்கு ஒரு 'பிரம்மோற்சவம்' என்று கூட சொல்லாம்.

பெண்களின் பெருமையைப் போற்றும் விழா, நவராத்திரி விழா. பெண்களின் கைவினைத்திறன், கற்பனை சக்தியைத் தூண்டும் விழா.

நவராத்திரி சமயத்தில் வீட்டில் "கொலு" என்னும் அமைப்பில், மூன்று, ஒன்பது அல்லது பன்னிரண்டு படிகள் அமைத்து, அதில் பல்வேறு வகையான பொம்மைகளை அமைத்து, அம்பிகையை அமைத்து, வழிபாட்டுடன், ஆடலும் பாடலுமாக வீடே சொர்க்க லோகம் போல காட்சியளிக்கும்.

நவராத்திரியில் கொலு வைக்கும் முறை.

* முதல் படியில் ஓரறிவு உயிர்ப் பொருட்களை உணர்த்தும் புல், செடி, கொடி போன்ற தாவர பொம்மைகள் இருத்தல் வேண்டும்.
* இரண்டாவது படியில் இரண்டறிவு கொண்ட நத்தை, சங்கு போன்ற பொம்மைகள் இருத்தல் வேண்டும்.
* மூன்றாவது படியில் மூன்றறிவு உயிர்களை விளக்கும் கரையான், எறும்பு போன்ற பொம்மைகள் இடம் பெற வேண்டும்.
* நான்காவது படியில் நான்கு அறிவு கொண்ட உயிர்களை விளக்கும் நண்டு, வண்டு பொம்மைகள் இடம் பெற வேண்டும்.
* ஐந்தாவது படியில் ஐந்தறிவு கொண்ட நான்கு கால் விலங்குகள், பறவைகள், பொம்மைகள் இடமி பெற வேண்டும்.
* ஆறாவது படியில் ஆறு அறிவு படைத்த உயர்ந்த மனிதர்களின் பொம்மைகள் இடம் பெற வேண்டும்.
* ஏழாவது படியில் மனிதனுக்கு மேற்பட்ட மகரிஷிகளின் பொம்மைகள் இடம் பெற வேண்டுமி.
* எட்டாவது படியில் தேவர்களின் உருவங்கள் இடம்பெற வேண்டும். நவக்கிரக அதிபதிகள், பஞ்சபூத தெய்வங்கள், அஷ்டதிக்கு பாலகர்கள் என்பன வைக்கலாம்.
* ஒன்பதாவது படியில் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் மும்மூர்த்திகள் அவர்தம் தேவியர்களான சரஸ்வதி, லட்சுமி, பார்வதி ஆகியோருடன் இருக்க வேண்டும். ஆதிபராசக்தி நடு நாயகமாக இருக்க வேண்டும்.

நவராத்திரி புராணம்

முன்பு வரமுனி என்ற பெரும் சக்தி வாய்ந்த முனிவர் ஒருவர் இருந்தார். எல்லாவற்றிலும் சிறந்து விளங்கியவர் வரமுனி. இவருக்கு நிகர் இவர்தான். தனக்கு இணை யாரும் இல்லை என்ற தலைக்கனம் இவருக்கு ஏற்பட்டது. பதவியும், தலைக்கனமும் ஏற்பட்டால் மற்றவர்களை துச்சமாக மதிக்கும் எண்ணமும் வரும்தானே?

வரமுனிக்கும் அது வந்தது. இவர் தலைக்கனம் காரணமாக அகத்தியர் போன்ற பெரும் முனிவர்களிடமும் மகிஷம் (எருமை) போல் உருவம் கொண்டு அவமரியாதையாக நடந்து கொண்டார். இதனால் கோபம் கொண்ட முனிவர்கள் அனைவரும், வரமுனியை எருமையாக போவாய் என்று அவருக்கு சாபமிட்டனர்.

ரம்பன் என்ற அசுரன் கடுமையான தவத்தில் ஈடுபட்டிருந்தான். அவன் தவத்தை மெச்சி அவன் முன் தோன்றினார் அக்னி பகவான். அவன் தனக்கு சர்வ வல்லமை பொருந்திய மகன் வேண்டும் என வேண்டினான்.

அவன் வேண்டியதை அருளிய அக்னி தேவன், ரம்பன்!, நீ கேட்ட வரத்தை அளித்தேன். நீ எந்த பெண்ணை கொண்டு ஆசை கொள்கிறாயோ அவள் மூலம் உனக்கு மகன் பிறப்பான் என்று கூறி மறைந்தார்.

மனம் முழுக்க உற்சாகத்துடன் வந்த ரம்பன் முதலில் கண்டது காட்டெருமையை. அவனது அசுர புத்தி வேலை செய்தது. காட்டெருமை மேல் காதல் கொண்டான். தானும் காட்டெருமையாக உருமாறினான். முனிவர்களால் எருமையாய் பிறப்பாய் என்று சாபம் பெற்ற வரமுனி, அசுரனின் வாரிசாக மகிஷாசுரனாக பிறந்தான்.

மகிஷாசுரன் 10 ஆயிரம் ஆண்டுகள் பிரம்மனை குறித்து தவம் இருந்தான்.

எனக்கு தேவர்கள், அசுரர்கள், மானிடர்களால் மரணம் ஏற்படக்கூடாது. கன்னிப் பெண்ணால்தான் மரணம் ஏற்பட வேண்டும் என்று வரம் கேட்டான். அவன் கேட்ட வரத்தை அருளினார் பிரம்ம தேவன்.

மகிஷாசுரனின் அராஜகம் அதிகமாகியது. மகாவிஷ்ணுவை தஞ்சமடைந்தனர் தேவர்கள். மகிஷாசுரனுக்கு மரணம் பெண்ணால் தான். அவனை சம்ஹாரம் செய்ய தகுந்தவள் மகாசக்தி மட்டும்தான் என்று கூறினார் மகாவிஷ்ணு.

மும்மூர்த்திகளும் தேவர்களும் ஒன்று கூடி பிரார்த்தனை செய்ததும் ஸத்வ, ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களையும் ஒன்றாக பெற்ற மகாலட்சுமியாய் தோன்றினாள் அம்பாள்.

தங்களை காக்க வந்த தேவிக்கு தேவர்கள் படைக்கலங்களைப் படைத்தனர். சிவ பெருமான் சூலம் தந்தார். அக்னி சக்தி தந்தார். வாயு பகவான் வில்லும், அம்புறாத்துணியும் கொடுத்தார். தேவி மகிஷனை சம்ஹாரம் புரிய சர்வலங்கார தேவதையாய் புறப்பட்டாள்.

அம்பாளுடன் கடும் போர் புரிந்தான் மகிஷாசுரன். கடும் போர் முடிவுக்கு வந்தது. அநீதி அழிக்கப்பட்டது. அழிந்தான் மகிஷாசுரன்.

அம்பாள் மகிஷாசுரனை சம்ஹாரம் செய்தது அஷ்டமி தினத்தன்று. தேவர்கள் அம்மனை வணங்கி வழிபட்டது அடுத்த நாளான நவமி தினத்தன்று. தேவி மணித்வீபம் (மூலஸ்தானம்) சென்றது அதற்கு அடுத்த நாளான தசமி தினத்தன்று. இந்த நாட்கள்தான் நவ ராத்திரியின் கடைசி 3 நாட்களாகக் கொண்டாடப்படுகிறது. ●

நம் இன நீச்சல் வீராங்கனை

செல்வி. சுவாதி

(8 வீடு - தவலையர் குலம்)

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் அருகே உள்ள சில்லமரத்துப்பட்டியைச் சேர்ந்த நம் இன இளம் நீச்சல் வீராங்கனை சுவாதி. இவர் 8 வீடு தவலையர் குலத்தைச் சேர்ந்தவர். பல்வேறு நீச்சல் போட்டிகளில் பங்கேற்று நம் 24 மனை இனத்திற்கு பெருமை சேர்த்து வருகிறார். இவரது தந்தை தற்போது இல்லை. தாய்க்கு நிரந்தர வருமானம் இல்லை. பெரிதாக பொருளாதார பின்புலம் இல்லை. நகர்ப்புற வசதிகள் இல்லை. ஆனால் இந்த 'இல்லை'களை எல்லாம் தாண்டி, "எனக்கு சாதிக்கும் துடிப்பும், அதற்காக அயராது உழைக்கும் உறுதியும் இருக்கின்றன. நிச்சயம் நாட்டுக்காக பதக்கம் வென்று கொடுப்பேன்' என்று குளுரைக்கிறார், இளம் நீச்சல் வீராங்கனை சுவாதி.

சிறு கிராமத்தில் இருந்து தேசிய அளவு முன்னேறியிருக்கிற சுவாதியின் பேட்டி...

உங்கள் சொந்த ஊர், குடும்பம் பற்றி...

அப்பா குருநாதன், எனக்கு 2 வயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார். தாய் அழகுத்தாய், ஒரு சாக்பிஸ் கம்பெனியில் தினக்கூலி வேலை செய்துதான் என்னைக் காப்பாற்றுகிறார். எங்கள் ஊரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் நான் 9-ம் வகுப்பு படிக்கிறேன்.

உங்களுக்கு நீச்சலில் ஆர்வம் ஏற்பட்டது எப்படி?

நான் ஆறாம் வகுப்பு படிக்கும்போது, தேனியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீச்சல் குளத்தில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக் கான நீச்சல் போட்டியைக் காண எங்கள் பள்ளியில் இருந்து அழைத்துச் சென்றி ருந்தார்கள். அங்கு நீச் சலைப் பார்த்ததுமே பிடித்துப் போனது. அங்குள்ள பயிற்சி யாளர் விஜயகுமாரிடம் என் விருப்பத்தைத் தெரிவித்து, பயிற்சியில் இணைந்தேன். தொடக்கத்தில் சனி, ஞாயிறு களில் மட்டும் அங்கு சென்று பயிற்சி பெற்ற நான், பின்னர் தினமும் பயிற்சி மேற் கொள்ள ஆரம்பித்தேன்.

நீங்கள் வென்ற முதல் போட்டி?

நான் ஏழாம் வகுப்பு படிக் கும்போது திண்டுக்கல்லில் நடைபெற்ற மாநில அளவிலான நீச்சல் போட்டியில் தேனி மாவட்டத்தின் சார்பில் பங்கேற்றேன். அதில், 50 மீட்டர் பட்டர்பிளை பிரிவில் தங்கப் பதக்கம் தட்டிவந்தேன்.

நீங்கள் தேசியப் போட்டிக்குத் தேர்வானது எவ்வாறு?

இந்திய பள்ளி விளையாட்டுகள் சம்மேளனம் (எஸ்.ஜி.எப்.ஐ.) சார்பில் சென்னை வேளச் சேரியில்

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற நீச்சல் போட்டியில் பங்கேற்றேன். அதில் 100 மீ. பட்டர்பிளை, 200 மீ.ஐ.எம். ஆகிய பிரிவுகளில் வெண்கலத்துடன், 200 மீ. பட்டர்பிளையில் தங்கம் வென்றேன். அதன் மூலம், டெல்லியில் நடந்த எஸ்.ஜி.எப்.ஐ. போட்டிக்குத் தேர்வானேன்.

10 திண்டுக்கல் 27-6-2020

தினத்தந்தி

இளைஞர் மலர்

நீச்சலில் அசத்தும் அரசுப் பள்ளி மாணவி

நீங்கள் டெல்லிக்கு எந்த எதிர்பார்ப்புடன் சென்றீர்கள்?

டெல்லியில் நம்மால் முடிந்த அளவு சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் சென்றேன். அதன்படியே, நான் 200 மீ. பட்டர்பிளை பிரிவில் 6-ம் இடம் பிடித்தாலும், மாநில அளவில் 2.57 நிமிடங்களில் நீந்தியிருந்த நான், டெல்லியில் 2.50 நிமிடங்களில் நீந்தியது மகிழ்ச்சி அளித்தது. முதல்முறையாக தேசியப் போட்டியில் பங்கேற்றது, ஊக்கமூட்டும் அனுபவமாக அமைந்தது.

வேறு தேசியப் போட்டியில் பங்கேற்றிருக்கிறீர்களா?

வேளச்சேரியில் கடந்த டிசம்பரில் நடந்த வாட்டர் போலோ அணி போட்டியில் எங்கள் தேனி அணி இரண்டாமிடம் பிடித்தது. அதன்மூலம், இந்த ஆண்டு ஜனவரியில் தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் நடைபெற்ற தென்மண்டல வாட்டர் போலோ போட்டியில் தமிழக அணி சார்பில் பங்கேற்று மூன்றாமிடம் பெற்றேன்.

உங்களின் உச்ச இலக்கு என்ன?

ஒலிம்பிக் போன்ற பெரிய போட்டியில் நாட்டுக்காக பதக்கம் வென்று கொடுப்பதுதான்.

போட்டிகளில் பங்கேற்பதற்கான செலவை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

அம்மா தனது தினக்கூலியில் குடும்பத்தை நடத்துவதற்கே சிரமப்படும் நிலையில், எனக்கு சத்தான உணவுகள் வழங்குவதற்கும், போட்டிகளில் பங்கேற்பதற்கான செலவைச் சமாளிப்பதற்கும் மிகவும் சிரமப்படுகிறார். டெல்லியில் நடைபெற்ற போட்டிக்கே, எங்கள் பள்ளி ஆசிரியர்கள், முன்னாள் மாண வர்கள் மற்றும் எங்கள் உறவினரான கார்த்திக்கின் உதவியால்தான் செல்ல முடிந்தது. நான் இலவசப் பயிற்சி பெற்றாலும், தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கும், போட்டிகளில் பங்கேற்பதற்கும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. எனவே அரசின் உதவியை எதிர்பார்க் கிறேன்.

தகுதி வாய்ந்த வீராங்கனை சுவாதிக்கு அரசின் உதவிக்கரம் நீளும் என்று நம்புவோம். இவரது அலைபேசி எண் 6369608996.

கோபுரம், கருவறை, தெய்வச்சிலை, அர்த்த மண்டபம், மகாமண்டபம் இந்த அமைப்புடன் திகழ்வது கோவில் எனும் வழிபாட்டுத்தலங்கள். அங்கு நடக்கும் ஆராதனைகள், பூசனைகள், மந்திர உச்சாடனைகள், ஒலிக்கும் பக்திப் பாடல்கள், பஜனைகள் அனைத்தும் தெய்வீகமான வழிபாட்டு முறைகள். இவற்றில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. அதைப்போலவே நாம் குடியிருக்கும் வீடுகளும் கோயில்களே. வீட்டில் நிலவும் அன்பு, மரியாதை, விருந்தோம்பல், அரவணைப்பு அனைத்துமே ஆராதனைகள்தான். அவைகளும் ஒரு வகையில் வழிபாடுதான். இக்கருத்தை வலியுறுத்தும் ஒரு கிராமத்துக் கதை.

இல்லமே கோயில்

ஒரு காலத்தில் ஊரில் மக்களுக்கெல்லாம் பலவிதமான கஷ்டம் நேர்ந்துவிட்டது. எல்லோரும் மனமிடிந்து போய்விட்டார்கள். அத்தனை பேரும் ஊர்க்காவல் தெய்வத்திடம் முறையிட்டார்கள்.

காவல் தெய்வம் அவர்கள் சொல்வதை எல்லாம் கேட்டது 'சரி நீங்களெல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறீர்கள். நாளை எல்லோரும் அவரவர் கஷ்டங்களை எல்லாம் மூட்டை கட்டிக் கொண்டு வாருங்கள். நான் தீர்த்து வைக்கிறேன். எனக்கு அந்த மூட்டைகளை கொடுத்துவிட்டு நான் கொடுக்கும் சிறிய மூட்டைகளைக் கொண்டு செல்ல வேண்டும்' என்று நிபந்தனை விதித்தது.

மறுநாள் எல்லோரும் அவரவர் கஷ்டங்களையெல்லாம் மூட்டையில் கெட்டியாகக் கட்டித் தலைமேல் சுமந்துகொண்டு வந்தார்கள். அவர்களது மூட்டைகளையெல்லாம் ஒரு பெரிய குழியில் போட்டு மூடி விட்டார்கள். ஒவ்வொருவருக்கும் அவர்கள் கொண்டு வந்ததைவிட மிகச்சிறிய மூட்டை தரப்பட்டது.

தொகுப்பு: திருமதி. ராணி சுப்ரமணி
D/o. K.S.முத்துக்காளி செட்டியார்,
தலைமைச் சங்க முன்னாள் தலைவர்

நீங்கள் கஷ்டங்களையெல்லாம் பெரிய பெரிய மூட்டையில் எனக்குக் கொடுத்து விட்டீர்கள். அதற்குப் பதிலாக சிறிய மூட்டை கொடுத்திருக்கிறேன். அதை அவரவர் வீட்டுக்குப் போய்

திறவுங்கள். இங்கே திறக்க வேண்டாம்' என்றது காவல் தெய்வம்.

எல்லோரும் சிறிய மூட்டைகளை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போனார்கள். போனதும்தான் சந்தேகம் வந்தது.

'பெரிய மூட்டைகளை எடுத்துக்கொண்டு விட்டீர்கள். அது சரிதான். நம் கஷ்டங்கள் எல்லாம் முடிந்துவிட்டன. ஆனால் இந்த சிறிய மூட்டை எதற்கு? இதில் ஒரு வேளை வேறு ஏதாவது சிறிய கஷ்டங்கள் இருக்குமோ? எப்படிப்பட்ட கஷ்டம் இருக்கும்? நோய் நொடி, பணக் கஷ்டம், பயம் என்று இப்படிப்பட்டவைகளில் ஏதாவது ஒன்று இருக்குமோ? ஐயோ இதுவரை இருந்த பணக்கஷ்டம், நோய், பயம் எல்லாம் நமக்கு அத்துபடி. இது புதிய வகை கஷ்டமாக இருந்தால் என்ன செய்வது? நமக்குப் பழக்கப்படாத கஷ்டங்கள் வந்தால் எப்படி சமாளிப்பது? நமக்கு இதுவரை இருந்த கஷ்டம் பரவாயில்லை. ஏனென்றால் அது பழக்கப்பட்டு விட்டது. இதேதடா புதிய தலைவலி. சரிதான், இதைக் காவல் தெய்வத்திடமே கொண்டு போய்க் கொடுத்து விடலாம்' என்று ஒவ்வொரு வீட்டிலும் முடிவு செய்து அந்த சிறிய மூட்டைகளை அத்தனை பேரும் கோவிலுக்குக் கொண்டு வந்தார்கள்.

காவல் தெய்வத்திடம் சொன்னார்கள்.

'நீங்கள் முடிவு செய்துவிட்டால் நான் ஒன்றும் செய்வதற்கில்லை. ஆனால் அதன் பிறகு என்னைக் குறை சொல்லக் கூடாது. பெரிய மூட்டையை வாங்கி சிறிய மூட்டையைக் கொடுத்திருக்கிறேன். அதுவே பெரிய விஷயம். இரண்டாவது அதில் என்ன இருக்கிறது என்பதை வீட்டில் திறந்து பார்க்கச் சொன்னேன். அதில் நல்லது தான் இருக்கும். என்னை நம்புங்கள். வீட்டிற்குப் போய் திறந்து பாருங்கள்' என்றது காவல் தெய்வம்.

எல்லோரும் ஒருசேர மறுத்து விட்டார்கள்.

'சரி முதலில் அவரவர்களுடைய கஷ்டங்களை எடுத்து வீட்டில் வைத்துவிட்டு வாருங்கள்.'

அவரவர் கஷ்ட மூட்டைகளைத் தேடி தோண்டி எடுத்துக் கொண்டு போனார்கள். எல்லோரும் திரும்பி வந்தபின் அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சிறிய மூட்டைகளை அவிழ்க்கச் சொன்னது காவல் தெய்வம். அதை அவிழ்த்தபோது ஒளி பொருந்திய மகிழ்ச்சி தேவதைகள் அவரவர் மூட்டையிலிருந்து 'அப்பாடா' என்று வெளியில் பறந்தன. அந்த கணத்தில் எல்லோரும் தமது தவறை உணர்ந்தார்கள். உடனே வெளியே பறக்கும் மகிழ்ச்சி தேவதைகளைப் பிடிக்க ஓடினார்கள்.

காவல் தெய்வத்திற்கு கோபம் வந்தது.

'என்மீது நம்பிக்கையில்லாமல், என்னுடைய பேச்சைக் கேளாமல் இப்படிச் செய்து விட்டீர்கள். இனிமேல் நீங்களெல்லோரும் சந்தோஷத்தை வெளியில் தேடுபவர்களாக போகக்கடவது' என்று சாபமிட்டு விட்டது.

அன்றிலிருந்து மனிதர்கள் மகிழ்ச்சி வெளியிலதான் இருக்குமென்றும், வீட்டை விட்டு வெளியில் போனால்தான் மகிழ்ச்சி கிடைக்குமென்றும் அலைய ஆரம்பித்தார்கள். வீட்டிற்கு வந்தால் அவர்கள் வைத்த கவலை மூட்டை அவர்களை அலைக்கழித்தது. இது உருவகக் கதை.

வீடு நமது பாசறை. அது செங்கல்லால் கட்டப்பட்டதானால் அதைக் கட்டிடம் என்று சொல்வோம். அதிலுள்ள மக்களின் இதயத்தால் கட்டப்பட்டதென்றால் அதை 'இல்லம்' என்போம். நமது வீட்டை ஒரு கோயிலாக வைக்காமல் மனிதர்கள் வந்து தங்கும் விடுதிகளாக மாற்றியிருக்கிறோம். வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் மற்றவர் மீது நல்லெண்ணமில்லாமல், ஏதாவது ஒரு வகையில் மூளியாக்கப்பட்ட எண்ணங்களைக் கொண்டிருக்கிறோம். வீட்டில் இருப்பவர்கள் நேசத்தால் பிணைக்கப் பெறவேண்டும். வாழ்த்துகளை இதய மொழியாகவும், உடன்பாட்டு வார்த்தைகளை புறமொழியாகவும் கொண்டிருக்க வேண்டும். மகிழ்ச்சியின் உற்பத்தி ஸ்தானமே வீடு. வருங்கால வளமையின் இருப்பிடமே வீடு. வெளியில் சென்றவர்கள் மகிழ்ச்சி அதிகம் வேண்டும் என்பதற்காக வீட்டிற்கு வரவேண்டுமேயொழிய, மகிழ்ச்சியாக இருப்பதற்கு வெளியில் செல்லக்கூடாது.

மனிதர்கள் தங்கும் விடுதிகள்தான் உலகில் நிறைந்துள்ளதேயொழிய இல்லங்கள் அருகி வருகின்றன. வசதிகள் பெருகப் பெருக இதயத்தில் வாசல் சுருங்குகிறது. அதனால் முதியோர் விடுதிகள் பல முளைக்கின்றன.

வீடுகளுக்குள்ளும் விடுதிகளாக ஒவ்வொரு அறையும் இருக்கின்றன.

எல்லா நலன்களின் இருப்பிடம் வீடு. அதில் பெறமுடியாத நற்குணங்களில்லை. அதில் பெற இயலாத ஜீவ சக்தி இல்லை.

ஒரு மனிதன் அருட்பிறப்பாக, முயற்சி உடையவனாக வெற்றி பெறுபவனாக உருவெடுப்பது வீட்டில்தான்: வெளியில் அருளாற்றலைப் பயன்படுத்துகிறான்.

வீட்டை வாழ்த்துவோம். அது சுவர்க்கம். வீட்டில் அமைதியில்லாதவன் வெளியில் எங்கும் தேடி அதை அடைய முடியாது. வீட்டை வாழ்த்தினால் வேதனைகள் தீரும். அருள்தன்மை கூடும். வளமை சேரும். அருளாற்றலின் பாதுகாப்பு கிடைக்கும்.

பூமியில் வளமை மிகுந்த இடம் வீடு. அதைக் கோயிலாக வைத்திருப்போம். அமைதிக் கூடமாக வைத்திருப்போம். செழிப்பின் விளைநிலமாக வைத்திருப்போம்.

வீட்டிலுள்ள ஒவ்வொரு பொருளும் அதனதன் இடத்தில் இருக்கட்டும். உடைந்துபோன, சீராக்க இயலாமல் வைக்கப்பட்ட பொருள்களை வெளியே எறிந்து விடுங்கள். அவை ஜீவகாந்தத்தை இழக்கச் செய்யும். வீட்டைச் சுத்தமாக வைத்திருங்கள். வாரம் ஒரு முறையாவது ஒரு அறையைச் சுத்தம் செய்தால், மாதம் ஒரு முறை எல்லா அறைகளும் சுத்தமாகும்.

சுத்தம் அருள் வளத்தைக் கூட்டும். ஜீவகாந்தத்தைப் பெருக்கும்.

- ★ திருப்பதியில் 200 ஆண்டுகளுக்கு முன்னர் 'புளியோதரை'தான் பிரசாதம், லட்டு கிடையாது.
- ★ பறவைகளுக்குப் பார்வைச் சக்தி அதிகம். வானத்தில் வட்டமிடும் பருந்து, தரையில் உள்ள பல்லியைக் கூடப் பார்த்து அதன் மீது பாய்ந்து பற்றும்.
- ★ வேட்டையாடும் விலங்குகளுக்குப் பார்வைச் சக்தி குறைவு. ஆனால் மோப்ப உணர்வு மொட்டுகள் சராசரியாக 22 கோடி என்ற அளவில் உள்ளன.
- ★ மனிதர்களுக்கு வாசனையை உணரும் மொட்டுகள் 50 லட்சம் உள்ளன. பத்தாயிரம் வெவ்வேறு விதமான வாசனைகளை நம்மால் பிரித்து அறிய முடியும்.
- ★ உயிர் வாழ்வதற்கு எல்லா உணர்வுகளும் வேண்டும் என்பதில்லை. செடிகள் வெளியிடும் கரியமில வாயுவை உண்டு வாழும் ஒரு புழு உள்ளது. அதற்கு அந்த ஒரு வாசனை மட்டுமே தெரியும்.
- ★ ஒவ்வோர் உயிரினமும் தம் உடலிலிருந்து தனித்தனி வாசனையைக் காற்றில் கலக்கிறது. வண்ணத்துப்பூச்சி தனது வாசனையால் பல மைல்களுக்கு அப்பால் உள்ள தனது இணையைக் கவரும்.
- ★ சூரியனின் புறஊதாக் கதிர்களை தேனீக்கள் உணர்கின்றன. சூரியன் இருக்குமிடத்தை வைத்து, தம் கூட்டுக்குத் திரும்பும் திசையை அவை தெரிந்துகொள்கின்றன.
- ★ தவளைக்குப் பார்வைத் திறன் குறைவு. தனது இரை மட்டுமே அதற்குப் புலப்படும்.
- ★ ஆப்கானிஸ்தானில் ரயில் கிடையாது.
- ★ இந்தியாவில் தமிழில் தான் 'பைபிள்' முதலில் மொழிபெயர்க்கப்பட்டது.

BASKAR CEMENTS & PRODUCTS

நிர்வாக அலுவலகம்: 9/454-4, குமரன் நகர், வீனஸ் பள்ளி பின்புறம், சி.ஆ. கோவில் ரோடு, கரூர் - 639 001.

தொழிற்சாலைகள்: கரூர், சென்னை, தூத்துக்குடி.

போன் : 04324 - 240295 செல்: 98424 62995 / 97509 62991

இ-மெயில்: baskarcements@gmail.com வெப்சைட்: www.baskarcements.com

தமிழ்ச் சான்றோர் பொள்ளாச்சி திரு. தருமராசு ஐயா

கொங்கு மண்டலச் சான்றோரும் புனிதத் தலங்களும் நூல் வெளியீட்டு விழாவில் இடமிருந்து வலமாக கவிஞர் முருகேச பாண்டியன், கவிக்கோ சிற்பி, திருமதி செல்லம்மாள், தருமராசு ஐயா, தவத்திரு குமரகுருபர அடிகளார், முனைவர் துரை அங்குசாமி, எழுத்தாளர் பழனியப்பன் ஆகியோர்

தமிழ்ச் சான்றோர் பொள்ளாச்சி திரு. தருமராசு ஐயா

(16 வீடு மும்முடியார் குலம்)

புகழ்பெற்ற பொள்ளாச்சி கம்பன் கலை மன்றத்தின் நிறுவனத் தலைவர், இயல், இசை, நாடகம் மூன்றையும் வளர்த்த முத்தமிழ் வித்தகர், தமிழறிஞர், நூல்கள் பல எழுதிய ஆய்வறிஞர், பண்பாளர் திரு. தருமராசு ஐயா அவர்கள்.

ஆற்றங்கரை அழகிய சிற்றூரான ஆத்துப் பொள்ளாச்சியில் 1934இல் பிறந்த இவர், இரண்டு முறை சாகித்ய அகாடமி விருது பெற்ற கவிஞர் சிற்பி அவர்களோடு சிற்றில் கட்டி விளையாடிய பள்ளித் தோழர்!

ஓராசிரியர் பள்ளியின் ஆசிரியராகவும், பின்னாளில் பள்ளித் தலைமை ஆசிரியராக பொள்ளாச்சி வட்டத்தில் பல ஊர்களில் பணியாற்றி பணி நிறைவு பெற்றார்.

இவர் தன் பெயருக்கு ஏற்ப தருமத்தின் வழி நின்று, தருமவானாய் தன் வாழ்வியலை நடத்தியவர்.

R. இராதாகிருஷ்ணன்,
வழக்கறிஞர் & நோட்டரி பப்ளிக்,
பொள்ளாச்சி.

தர்மம் என்பது என்ன?

தனது செல்வத்தில் சிறுபகுதியை நன்கொடையாகத் தருவது, கோயில் உண்டியல்களில் கொட்டிக் குவிப்பது இவை மட்டுமல்ல தர்மம்.

பிறர் நலன் பேணுவது, மற்றவர் துன்பத்திற்கு கண்ணீர் விட்டு உதவி செய்ய ஓடோடி வருவது, தான் ஈட்டிய சிறு பொருளையும் பிறரது வயிற்றுப் பசி போக்கவும், அறிவுப் பசி நீக்கவும் முனைந்து செயல்படுபவரே தருமவான். அத்தகைய தருமசீலராகத் திகழ்ந்து தருமசாலையாகவே விளங்கியவர் ஐயா தருமராசு அவர்கள்.

பொள்ளாச்சியில் குடியேறிய பின் கம்பன் கலைமன்றம் என்ற அமைப்பை நிறுவி, தலைவராகப் பொறுப்பேற்று, இயல், இசை, கூத்து எனும் முத்தமிழ் நிகழ்ச்சிகளில் முத்திரை பதித்து நடாத்தி சமுதாயம் முன்னேற அரும்பாடுபட்ட அற்புத மனிதர்.

இலக்கியம், மகாகவி கவிதைகள், வள்ளலார் நாடகம், நாட்டுப் புறப் பாடல்கள், ஒயிலாட்டம், நாயன்மார்கள் வரலாறு, ஆழ்வார்களின் அமுத மொழிகள், இதிகாசங்கள், மருத்துவம் போன்ற எண்ணற்ற அறிவுக் களங்களை அத்துறை வல்லுநர்களைக் கொண்டு, தான் நடாத்திய கம்பன் கலை மன்றத்தில் வெளிப்படச் செய்த புனிதர்.

புதியவர்களுக்கு தயங்காமல் மேடை கொடுத்தார். விருப்பு எனும் வித்தை ஊன்றி ஆர்வம் எனும் நீரைப் பாய்ச்சி இலக்கியம் செழித்து வளர்ந்திட பலகாலும் பாடுபட்ட பண்பாளர். ஒரு தவ முனிவரின் பர்ணசாலையைப் போல் உன்னதமான வாழ்க்கை வாழ்ந்த உத்தமர்.

வள்ளுவரில் தோய்ந்தவர், வள்ளலாரில் மூழ்கியவர், 'வாழ்வில் மேன்மை பெற வள்ளலாரின் பாதை' என்ற நூலை எழுதி மணிமேகலைப் பிரசுரம் மூலம் வெளியிட்ட வல்லமைமிகு எழுத்தாளர். பொள்ளாச்சி ந.க.ம. கல்லூரியில் தமிழ்த்துறையில் இந்த நூல் மாணாக்கர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டது.

'நினைவில் நிற்கும் ஊர்கள் நெஞ்சில் நிற்கும் மனிதர்கள்' என்ற நூல் வழியாக பொள்ளாச்சி வாழ் சாதனையாளர்கள், ஆலயங்கள், விழாக்கள் சங்கமிக்கும் ஒரு வரலாற்றுப் பெட்டகத்தை தமிழுக்குத் தந்துள்ளார்.

ஒரு எழுதுகோலின் தவம், பத்ரிநாத்திலிருந்து ராமேசுவரம் வரை, மாதர் குல மாணிக்கங்கள், தியாக தீபம், வாழ்விக்க வந்த வள்ளலார், கம்பன் கவியமுதம் போன்ற பல படைப்புகளை தமிழ் கூறும் நல் உலகுக்கு உவகையுடன் வழங்கியுள்ள இலக்கியப் படைப்பாளி.

தொல்காப்பியத்தை தினம்தோறும் சிந்திப்பவர். டெண்டுல்கருக்கு கண்ணீருடன் பிரியாவிடை கொடுத்தவர். வலம்புரிஜானின் வாழ்த்தைப் பெற்றவர். அப்துல் கலாமின் அன்பைப் பெற்றவர். முன்னைப் பழம் பொருளுக்கும், பின்னைப் புதுமைக்கும் பாலமாக இருந்தவர். ஆன்றோர்கள், சான்றோர்கள், பாமரர்கள் அனைவரிடமும் அன்பினிக்கப் பழகுகின்ற பேரன்புப் பெட்டகம்.

தமிழைத் தாயாகப் போற்றியவர். தர்மராஜு என்ற பெயரை இளம் வயதிலேய தர்மராசு என பெயரை மாற்றிக் கொண்டவர். இலக்கியம் ஒரு சிறகாகவும், ஆன்மீகம் மற்றொரு சிறகாகவும் கொண்டு வானத்தில் உயரப்பறந்த தமிழண்ணல். பகுத்தறியும், பொதுவுடைமைச் சிந்தனையும் கொண்ட பண்பின் நாயகர். குறள்வழி வாழ்ந்த குணாளர்.

பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள தமிழார்வலர்களின் சந்திப்பு மையமாக கம்பன் கலை மன்றம் விளங்கியது.

இவரது இல்லம் இலக்கியவாதிகளின் வேடந்தாங்கலாக விளங்கியது. பாரதிக்கு ஒரு செல்லம்மாள் போல தர்மராசு ஐயா அவர்களின் துணைவியார் கோலார்பட்டி செல்லம்மாள் அவர்கள் விருந்தோம்பலை அருந்தி மகிழாத தமிழார்வலர்களே பொள்ளாச்சி வட்டத்தில் இல்லை என்று கூறலாம்.

பொருள் வசதி படைத்தவர்கள் தொடங்க வேண்டிய அறக்கட்டளையை ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்த இவர், பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் 1991ல் தோற்றுவித்தார். மண்டினி ஞாலத்தில் உள்ளோர்க்கு எல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே என்ற காப்பிய வரிகளுக்கேற்ப வடலூர் சத்திய தருமச்சாலை அன்னதானக் கட்டளை நிரந்தர வைப்புத் திட்டத்திற்கு பொருளுதவி செய்தார். பொள்ளாச்சி கம்பன் கலை மன்றம் என்ற ஞானப் பண்ணையின் தலைவராக இருந்து 275 நிகழ்ச்சிகளை அவர் பரிபூரணம் அடையும் வரை நடாத்தி வந்தார்.

2013இல் இவரது நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்ற கோவை சரவணம்பட்டி கௌமார மடாலய ஆதீனகர்த்தர் தவத்திரு குமரகுருபர அடிகளார் தமது உரையில், 'தமிழ்த்தொண்டாற்றியதில் அருட்செல்வர் ந.மகாலிங்கம், கவிஞர் சிற்பி, தருமராசு ஐயா ஆகிய பொள்ளாச்சிப் பெருமக்களின் பங்கு போற்றுவதற்கு உரியது' என்று புகழாரம் சூட்டினார்.

அவ்விழாவில் பேசிய குலமுரசு ஆசிரியர் பேராசிரியர் துரை அங்குசாமி தனது பேச்சில் 'வாழும் காலத்தில் தமிழ்ச் சான்றோர்கள் பெருமைப் படுத்தப்பட்டதில்லை. திரு.வி.க.வும் பாரதியுமே இதற்கு உதாரணம். அதைப்போல இல்லாமல் தருமராசு ஐயா அவர்களின் வாழ்வியலை ஒரு காப்பியமாக்க வேண்டும். அதை அண்ணன் சிற்பி அவர்கள் செய்யவேண்டும்' என வேண்டுகோள் விடுத்தார். அவ்விழாவில் கவிஞர் முருகேச பாண்டியன், கவிஞர் சிற்பி மற்றும் ஏராளமான தமிழ் அன்பர்கள் ஐயாவைப் பெருமைப்படுத்திப் பேசினர்.

தமிழ் கூறும் நல்லுலகமே போற்றும் தமிழ்ச் சான்றோர் - தருமத்தின் வாழ்விடமாகத் திகழ்ந்த ஐயா தருமராசு அவர்கள் 01-09-2018இல் அருட்பெருஞ்சோதியில் கலந்தார். அவர் ஆற்றிய அளப்பரிய அறப்பணியால் தமிழ் நெஞ்சங்களில் மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

டோல்கேட்டில் வாங்கும் ரசீதை என்ன செய்வீர்கள்?

அவசியம் அறிந்திருக்கவேண்டிய தகவல்!

சுங்கக் கட்டணம் வசூலிக்கும் சாலைகளில் பயணம் மேற்கொள்ளும் மக்களின் கவனத்திற்கு..

நீங்கள் வெளியூர் செல்லும் பொழுது தேசிய நெடுஞ்சாலையில் அதாவது நேஷனல் ஹைவேஸ் ரோட்டில் (NHAI) செல்லும்போது கொடுக்கும் பணம். டோல்கேட் கிராஸ் செய்வதற்கு மட்டும் அல்ல. பிறகு வேறெதற்கு? என்கிறீர்களா?

சுங்கச் சாவடியைக் கடக்கும் போது, வாகனத்துக்கு ஏற்ப பணத்தைக் கட்டி ரசீது பெற்றுக் கொள்வோம். அதை பத்திரமாக வைத்து கொள்ளவும், எதற்கு என்றால்..

உங்க பயணம் எந்த சிரமும் இல்லாமல் இருக்கவும் அப்படி இடர் நேர்ந்தால் சரி செய்யவும் சேர்த்து தான் அந்த பணம் செலுத்துகிறோம்..

காரில் செல்பவர்கள் யாருக்காவது

1. மருத்துவ உதவி தேவைப்பட்டால் ரசீதின் பின்புறம் செல்போன் எண் பதிவாகியிருக்கும். அதற்கு போன் செய்யவும். உடனடியாக ஆம்புலன்ஸ் பத்து நிமிடத்தில் வரும்.

2. வண்டி பழுதாகி நின்றாலோ அல்லது பஞ்சர் ஆகிவிட்டாலும் அதுக்கு இன்னொரு நம்பர் இருக்கும். அதற்கு போன் செய்தால் பத்து நிமிடத்தில் உங்களுக்காக வந்துரு வாங்க, வந்து பஞ்சர் போட்டு கொடுத்துடுவாங்க, ரிப்பேர் எனில் அதையும் சரிசெய்து கொடுத்துடுவாங்க. இது அவங்க கடமையாகும்.

3. பெட்ரோல், டீசல் இல்லாமல் வண்டி நின்று விட்டால்.. தகவல் சொன்னா உங்களுக்கு அஞ்சு லிட்டர் அல்லது 10 லிட்டர் பெட்ரோல் அல்லது டீசலை கொண்டு வந்துவிடுவார்கள். அதுக்குண்டான பணத்தை கொடுக்க வேண்டும்.

இதற்கெல்லாம் சேர்த்துத் தான் நம்ம கிட்ட சுங்கக் கட்டணம் வசூல் பண்றாங்க. இந்த விஷயம் நிறைய பேருக்குத் தெரியாமல் ஏதாவது பிரச்னை ஆச்சுன்னா தவிச்சு போறாங்க, மன உளைச்சலாகுறாங்க இதை தவிர்க்க இந்த செய்தியை அனைவரிடமும் கொண்டு செல்லவும்..

நன்றி: தினமணி இணையதளம் (24-09-2019)

புனிதம் பொங்கும் புரட்டாசி

புரட்டாசி மாதம், தமிழ் மாதங்களில் ஆறாவது மாதமாகும். சூரியன் கன்னி ராசியில் இருக்கும் நாட்களைத்தான் நாம் புரட்டாசி மாதம் என்கிறோம்.

பெருமாளுக்கு உகந்த மாதம் புரட்டாசி. புரட்டாசியில் பக்தர்கள் விரதமிருந்து பெருமாள் கோவிலுக்கு சென்று வழிபடுவார்கள்.

புரட்டாசி என்றாலே திருமலை திருப்பதியும், அங்கு இருக்கும் திருவேங்கடவனும் நம் நினைவுக்கு வருவர். புரட்டாசி மாதம் புனித மாதமாக இருப்பதாலும், பெருமாளுக்கு உகந்த மாதமாக இருப்பதாலும் வைணவ கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடத்தப்படும். முன்னோர்களின் ஆசியை பெற்றுத்தரும் மிக அற்புதமான மாதம் புரட்டாசி மாதமாகும். புரட்டாசி மாதத்தில் இருக்கும் சிறப்புகள் என்னென்ன?

புரட்டாசி சனி

புரட்டாசி சனிக்கிழமைகளில் பெருமாளுக்கு மாவிளக்கு ஏற்றி வழிபாடு செய்வது சிறப்பை தரும். திருப்பதியில் புரட்டாசி சனிக்கிழமைகளில் வழிபாடு செய்வது மிகவும் சிறப்பாகும்.

புரட்டாசி சனிக்கிழமை விரதத்தை மேற்கொண்டால் குலதெய்வத்தின் அருள்

கிடைக்கும், செல்வம் செழிக்கும் மற்றும் துன்பங்கள் விலகும்.

புரட்டாசி மாத சனிக்கிழமைகளில் சனிபகவானை நினைத்து விரதமிருந்தால் சனி தோஷம் நீங்கும்.

புரட்டாசி மாதம் வெயிலும், காற்றும் குறைந்து மழை ஆரம்பிக்கும் மாதம்.

இது வெயில் கால வெப்பத்தை காட்டிலும் கெடுதல் தரக்கூடியது.

இந்த நேரத்தில் அசைவம் சாப்பிடுவது உடல் சூட்டை

அதிகப்படுத்தி உடல் நலத்தை குறைக்கும்.

அதனால்தான் புரட்டாசி மாதத்தில் அசைவத்தை ஒதுக்கி வைத்தனர் நம் முன்னோர்கள்.

புரட்டாசி அமாவாசை

மறைந்த நமது முன்னோர்கள் மொத்தமாக ஒருசேரக் கூடும் காலமே மகாளய பட்சம் என்று கருதப்படுகிறது. பட்சம் என்றால் 15 நாட்கள் என்பது பொருள். அதாவது, மறைந்த நமது முன்னோர்கள், 15 நாட்கள் நம்மோடு தங்கக்கூடிய காலங்களை மகாளய பட்சம் என்று கூறுகிறோம்.

மகாளய பட்சம், புரட்டாசி மாத பௌர்ணமிக்கு மறுநாள் பிரதமை திதியில் துவங்கி அமாவாசை வரை நீடிக்கிறது. புரட்டாசி மாதத்தில் வரக்கூடிய அமாவாசையே, மகாளய அமாவாசை என்று அழைக்கப்படுகிறது.

நவராத்திரி

மக்களின் பண்பாட்டை வளர்க்கும் விழாக்களில் முக்கியமானது நவராத்திரி. புரட்டாசி மாதம் அமாவாசைக்கு பிறகு பூர்வ பட்ச பிரதமை திதியில் ஆரம்பித்து நவமி திதியில் முடியும் ஒன்பது இரவுகளே நவராத்திரி ஆகும். வீடுகளில் நவராத்திரி பூஜையை சிறப்பாக கொண்டாடுவார்கள்.

மகாப் பெரியவா அவர்களின் சந்திரமௌலி பூஜை

மகாப் பெரியவரின் மகத்தான கருணை

மனித வடிவில் ஒரு தேவனாய் நடமாடும் தெய்வமாய் இருந்து தனது மகோன்னத சக்தியால் மக்கள் துயர் நீக்கிய மகான் மகாப்பெரியவா.

24 மணி நேரம் கொண்ட ஒருநாளில் பூஜை, தியானம் என 15 மணி நேரத்திற்கு மேல் தினமும் ஒதுக்கியவர் மகாப்பெரியவா.

ஆயிரம் துன்பங்களைச் சுமந்து கொண்டு வெளியே செல்ல முடியாமல் தவிக்கும் பக்தர்களை தனது திருக்கண்களால் பார்த்த உடனேயே புரிந்து கொண்டு அருளாசி வழி அவர்கள் துயரத்தைப் போக்கியவர்.

13 வயதிலேயே சங்கராச்சாரியார் எனும் பட்டத்திற்கு வந்தவர். நாடெங்கும் ஓடுகின்ற புண்ணிய நதிகளில் நீராடி புனிதம் பெற்றவர்.

இவர் பார்வை பட்டாலே பாவங்கள் சூரியன் கண்ட பனிபோல் கழுவப்படும். தோஷங்கள் நீங்கும். இதற்கு நயன தீட்சை என்று பெயர். நயன தீட்சையால் நலம் பெற்றோர் ஏராளம்! ஏராளம்!

அனுதினமும் மகாசுவாமிகள் செய்கின்ற பூஜைகளில் ஒன்று 'சந்திரமௌலி' பூஜையும் ஒன்று.



முனைவர் துரை அங்குசாமி

பூஜைகளை முடித்து அன்றாடும் இவர் வழங்குகிற அருளாசியால் அதிசயங்கள் நிகழ்ந்து கொண்டே இருந்தன.

அவரது புனிதப் பயணமான தேசாடனத்தில் கிராமம் கிராமமாக சென்று மக்களைச் சந்தித்து அவர்களை பூஜையில் பங்கேற்க செய்து பிரசாதம் வழங்கி அருள்வது அவரது நித்ய கடமைகளில் ஒன்றாக இருந்தது.

மேவிய ஆறுகள் பல ஓடி மேனி செழித்த தமிழ்நாடு என்று பாடி மகிழ்ந்தான் பாரதிப் புலவன்.

அந்த ஆறுகளில் முதன்மையான காவிரியின் கரையோரம் உள்ள ஆடுதுறை

எனும் ஊருக்கு அருகில் உள்ள சிற்றூரில் ஒரு முறை தங்கி இருந்தார்,

தொலைக்காட்சி, இணையதளங்கள் இல்லாத காலம் அது. இருப்பினும் பத்திரிக்கைகள் சுவாமிகளின் வருகை பற்றி பிரசுரித்து மகிழ்ந்தன.

அக்கிராமப் பகுதியில் வாழ்ந்த மக்களெல்லாம் தங்கள் பகுதிக்கு தெய்வமகான் வருகை தந்து தரிசனம் செய்வது தங்களுக்கெல்லாம் கிடைத்த தவப்பேறு என பூரித்துப் போனார்கள்.

அக்கிராமத்தில் உள்ள முக்கிய பிரமுகர் ஒரு சாஸ்திரியார் ஏழ்மை நிலைமையில் உள்ளவர். மகான் வருகையால் மிகுந்த புளகாகிதம் அடைந்து மகான் வருகைக்கு ஒரு நிதி தர வேண்டும் என்ற நோக்கோடு நிதி திரட்டினார். குறைந்தபட்சம் 1000/- ரூபாயை பிட்சாடன நிதியாக அவர் தங்கியுள்ள ஊர்களில் தருகிறார்கள் என அறிந்து மிகவும் சிரமப்பட்டு நிதி திரட்டினார். அவரால் ரூ 495 மட்டுமே திரட்ட முடிந்தது. எவ்வளவு முயன்றும் அதற்குமேல் திரட்ட முடியவில்லை. சாஸ்தியார் சுவாமிகளை சென்று தரிசனம் செய்தார். சாஸ்தியார் முகத்தில் இருந்த கவலை ரேகைகளை புரிந்து கொண்ட சுவாமிகள் ஏன் கவலையாக இருக்கிறே என்று கேட்டார். பிட்சாடன நிதியாக ரூ 1000 தன்னால் திரட்ட இயலவில்லையே எனும் வேதனையில் தான் இருப்பதாக இந்த பிரமுகர் சாஸ்தியார் சொன்னார்.

மகாசுவாமிகள் இதுக்கு ஏன் கவலைப்படறே சந்தரமௌலி பார்த்துக்குவான். தைரியமாய் இரு என்று சொல்லிவிட்டு,

நான் நாளை காவிரியில் முங்கி துலாஸ்நானம் பண்ணனும். நாளை காலையில் காவிரியில் எவ்வளவு தண்ணீர் ஓடறதுன்னு பார்த்திட்டு வா என்று கூறினார்.

சுவாமிகள் இட்ட ஆணையை நிறைவேற்ற அதிகாலைப் பொழுதில் சாஸ்திரியார் காவிரிக் கரைக்கு சென்று நீரோட்டத்தின் அளவைப் பார்த்துவிட்டு, தான் முங்கிக் குளித்துவிட்டு மடத்திற்கு ஆயிரம் ரூ திரட்டித் தர முடியவில்லையே என்ற கவலையோடு கரைக்கு வந்தார்.

அப்போது ஒருவர் சைக்கிளில் வந்திறங்கி, தான் காவிரியில் துலாஸ்தானம் செய்ய விரும்புவதாகவும், தனக்கு துலாஸ்தானம் செய்யும்போது சொல்லப்படும் மந்திரம் தெரியாது எனவும் கூறி தனக்கு சங்கல்பம் செய்வித்து அந்த மந்திரத்தைச் செல்ல முடியுமா என்று சாஸ்திரியாரை வேண்டினார். இவரும் மகிழ்வோடு அப்பணியைச் செய்து முடித்தார்.

அவர் அதற்கு காணிக்கையாக ரூ. 5ம் தந்துவிட்டு "எனக்கு ஒரு உதவிசெய்ய முடியுமா?" என்று சாஸ்திரியாரிடம் கேட்டார்.

"சொல்லுங்கள் செய்கிறேன்" என்றார்.

இந்த ஊரில் மகாப் பெரியவர் வந்து தங்கியுள்ளதாக சொல்கிறார்கள். அவரை தரிசிக்க வேண்டும் என்பது எனக்கு கொள்ளை ஆசை. ஆனால் எனக்கு ஒரு தீட்டு இருப்பதால் தரிசனம் செய்ய இயலாது. எனவே எனது காணிக்கை ரூ 500/- மடத்திற்கு செலுத்தி உதவுவீர்களா என்று கேட்டார். இவர் மிகுந்த மகிழ்ச்சியோடு நான் செய்கிறேன் ஐயா என்று கூறிவிட்டு ரூ 500 பெற்றுக் கொண்டு நகர்ந்தார். ஒரு அடி சென்றதும் மீண்டும் திரும்பி ஐயா உங்கள் பெயர் என்று கேட்டார். அவர் சொன்ன பெயரைக் கேட்டு அதிர்ந்துபோய்விட்டார் சாஸ்திரி.

அவர் சொன்ன பெயர் 'சந்திர மௌலி'...

எல்லாம் சந்திர மௌலி பார்த்துக் கொள்ளுவார் என்று மகாசுவாமிகள் கூறியதை அனுதினமும் 'சந்திரமௌலி' பூஜை செய்வதால் அப்படிக் கூறியுள்ளார் என்று சாஸ்திரிகள் நினைத்தார். அதன் ஆழமான பொருளை உணர்ந்து அனுபவித்து அதிசயத்தில் உறைந்துவிட்டார் சாஸ்திரிகள்.

காவிரிக் கரையிலிருந்து நேராகச் சென்று மகாசுவாமிகளை தரிசனம் செய்து ரூ. 1000/- மடத்துக்கு செலுத்தி மகிழ்ந்தார் சாஸ்திரி.

மகாஸ்வாமி "சந்திரமௌலி தரிசனம் கிடைத்ததா?" என்று புன்சிரிப்போடு கேட்டதை தனக்குக் கிடைத்த தவப்பேறாக நினைத்து மகிழ்ந்தார் சாஸ்திரியார்.

- கருணை மழை தொடரும்

உடுமலை சட்டமன்ற தொகுதி பெரிய கோட்டை ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் கழக அமைப்புச் செயலாளர் அரசு கேபிள் டிவி நிறுவன தலைவர் திரு உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் அம்மா இரு சக்கர வாகனம் திட்டத்தின் கீழ் 34 மகளிருக்கு இருசக்கர வாகனம் வழங்கி மானியத் தொகை தலா 25 ஆயிரம் வழங்கியும் உடுமலை ஒன்றியம் 16 ஊராட்சிகளுக்கு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பேட்டரியில் இயங்கும் 34 வாகனங்களை வழங்கியும் ஐந்து பயனாளிகளுக்கு பசுமை வீடு திட்டத்திற்கான பணி ஆணையினை வழங்கியும் மாரியம்மன் நகரில் சமுதாய கூட்டத்திற்கு சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப்பட்ட பணியை திறந்து வைத்தார். திருப்பூர் மாவட்ட ஆட்சியர் விஜயகார்த்திகேயன், ஊரக வளர்ச்சித் திட்ட இயக்குனர் ரூபன் ஷங்கர ராஜா, திருப்பூர் மாவட்ட ஆவின் தலைவர் வக்கீல் மனோகரன், உடுமலை ஆர்டிஓ ரவிக்குமார், மகளிர் திட்ட அலுவலர்கள், சமூக நலத் துறை ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள், பெரியகோட்டை ஊராட்சி மன்ற தலைவர் பேச்சியம்மாள் பாலு, கழக நிர்வாகி கே.ஜி.சண்முகம் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்

வண்ணாரப்பேட்
ஸ்ரீ சாந்தி சாரிஸ்
டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ்
மொத்த விலைக்கடை
SRI SHANTHI SAREES
ஸ்ரீ சாந்தி சாரிஸ்
NO.1 SHOP
New Collections ! New Style ! New Fashion
SS No.1 Shop
New சாந்தி சாரிஸ்
வண்ணாரப்பேட்
New SHANTHI SAREES
SHANTHI SAREES
SUPER READYMADES
NO.1 SHOP
ஹோல்சேல் பிரைஸ்ல...
நாங்க மட்டும் சென்னையில...
சூப்பர் ரெடிமேட்ஸ்
No.59, M.C. ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 21.
✆ : 044 - 25900181 | 25901181 | 25902183

WITH BEST COMPLIMENTS

- Sri Sai Traders
- Soorya Traders
- Sri Meenatchi Ammal Transline
- Sri Ramakrishna Packlines
- Soorya Food Products

ADDRESS

New No. AG-31, Shanthi Colony Main Road,
Annanangar, Chennai - 600 040.
Phone : 044 - 26214554 / 26266869

Factory : SR No.89, Walajabath Kancheepuram D.T

Factory : 176, Avaloor Village, Angambakkam Salai
Kannadian Kudisai, Kanchipuram Dist. - 602 105

Ware House : A-10(1), SIPCOT Industrial Estate,
Irungattukottai, Sriperumbudur Taluk, Kancheepuram Dist. - 602 105.

நளபாகம்

- ★ உருளைக்கிழங்கு வறுவல் செய்யும்போது புளிப்பு இல்லாத தயிர் அரைக்கரண்டி ஊற்றி செய்தால் மிகவும் சுவையாக இருக்கும்
- ★ வற்றல் குழம்பு வைக்கும்போது சிறிதளவு கடுகு, மஞ்சள்தூள், மிளகாய் வற்றல் போன்றவற்றை வெறும் பாத்திரத்தில் போட்டு வறுத்து அதனை தூளாக்கி குழம்பில் போட்டு இறக்கினால் நல்ல மணமாக இருக்கும்.
- ★ சப்பாத்தி எப்போதும் சூடாக இருக்க வேண்டுமானால் சில்வர் பேப்பரில் சுற்றி வைத்தால் சூடாக இருக்கும்.
- ★ உருளைக்கிழங்கு வேக வைத்த தண்ணீரில் பாத்திரங்களை கழுவினால் பாத்திரங்கள் பளபளப்பாக இருக்கும்.
- ★ ரசம் செய்யும்போது அதனுடன் தேங்காய் தண்ணீரைச் சேர்த்தால் அருமையான ருசியாக இருக்கும்.
- ★ காய்ந்த மிளகாயை வறுக்கும்போது நெடி வரும். அவை வராமல் இருப்பதற்கு சிறிது உப்பு போட்டு வறுத்தால் நெடி வராது.
- ★ வெங்காய பக்கோடா செய்ய மாவு பிசையும் போது வறுத்த நிலக்கடலையை பொடி செய்து மாவுடன் சேர்த்து பிசையவும். இதனால் பக்கோடா மொறு மொறுவென்று ருசியாக இருக்கும்.
- ★ தேங்காய்த் துருவல் மீதியானால், அதை லேசாக வதக்கி சிறிது உப்பு சேர்த்து வைத்தால் மறுநாள் சமையலுக்குப் பயன் படுத்திக் கொள்ளலாம்.
- ★ பவுடர் மற்றும் ரசம் பவுடர் எப்போதும் புதியதாக மணம் மாறாமல் இருக்க சாம்பார் பவுடர் மற்றும் ரசம் பவுடர் பாக்கெட்டுகளை பிரிஜ்ஜின் பிரீஸரில் வைத்து உபயோகிங்கள். மணம் மாறாமல் இருக்கும்.
- ★ வெங்காய சட்னி கசக்காமல் இருக்க சிறிது எண்ணெய் விட்டு வதக்கியபின் அரையுங்கள். சட்னி கசக்காமல் ருசிக்கும்.
- ★ சாப்பாட்டைப் பொட்டலமாக கட்டும்போது வாழை இலையை பின்புறமாகத் திருப்பி தணலில் லேசாகக் காட்டியபின்னர் கட்டினால் இலை கிழியாமல் இருக்கும்.
- ★ பீன்ஸ், பட்டாணி, முட்டை கோஸ் போன்ற காய்கறிகள் நன்றாக குழைய வேகவைக்க முதலில் உப்புப் போடாமல் வேகவைத்து, வெந்தபிறகு உப்பு சேர்க்கவேண்டும்.
- ★ பன்னீர் மசாலா செய்யும்போது பன்னீரை வறுத்தவுடன் உப்புத் தண்ணீரில் சிறிது நேரம் போட வேண்டும். பன்னீர் பஞ்சு போல மிருதுவாக இருக்கும்.
- ★ சுவர்களில் ஆணி அடித்திருப்போம். அது தேவையில்லை எனில் அதை எடுத்து விட்டு சுவரின் வண்ணத்திற்கு ஏற்ப, வண்ணக் கலவையை பற்பசையில் கலந்து ஓட்டை போட்ட இடத்தில் அடைத்துவிட்டால் ஓட்டை தெரியாமல் மறைந்துவிடும்.
- ★ விஷேசங்களுக்கு சென்று வந்தவுடன் பட்டு புடவையை களைந்து உடனே மடித்து வைக்க கூடாது. நிழலில் காற்றாட 2 அல்லது 3 மணி நேரம் உலரவிட்டு பின்பு அதனை கைகளால் அழுத்தி தேய்த்து மடித்து எடுத்து வைக்கவேண்டும்.
- ★ கறிவேப்பிலை நீண்ட நாட்கள் காயாமல் இருப்பதற்கு ஒரு அலுமினியப் பாத்திரத்தில் போட்டு மூடி வைத்தால் காயாமல் இருக்கும்.
- ★ சப்பாத்திக்கு மாவு பிசைவதற்கு முன்னால் கையில் சிறிதளவு உப்பைத் தடவிக் கொண்டால் கையில் சப்பாத்தி மாவு ஒட்டாது.

உடல் நலம்

சானிடைசர்களாலும் பிரச்சினை வரும்; தேவைப்பட்டால் மட்டும் பயன்படுத்துங்கள்..!!

கரோனா காலத்தில் எந்தப் பக்கம் திரும்பினாலும் சானிடைசரும், முகக்கவசங்களும் தான் கண்ணில்படுகின்றன. அந்த அளவுக்குக் கிராம மக்கள் கூட இவற்றைப் பயன்படுத்தும் அளவுக்கு விழிப்புணர்வு பெற்று விட்டார்கள். ஆனால், அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதுபோல சானிடைசரை அதிகமாகப் பயன்படுத்தினால் அதுவும் நமது உடம்புக்கு விஷமாகும் என்கிறார் 'மருத்துவர் தீபா'.

மக்கள் மத்தியில் அதிகரித்திருக்கும் சானிடைசர் பயன்பாடு குறித்தும் அது ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்தும் 'இந்து தமிழ்' இணையத்திடம் சில கருத்துகளைப் பகிர்ந்து கொண்ட தீபா, "சானிடைசர் பயன்படுத்தி விட்டால் கையைக் கட்டாயம் சோப்புப் போட்டுக் கழுவி விட்டுத் தான் உணவுப் பொருட்களைக் கையால் எடுத்து உண்ண வேண்டும். ஆனால், சானிடைசர் பயன்படுத்தி விட்டாலே கை சுத்தமாகி விடுவதாக பெரும்பாலானவர்கள் மத்தியில் தவறான புரிதல் இருக்கிறது.

அடிக்கடி சானிடைசர் பயன் படுத்துவதால் நமது கைகளில் உள்ள நல்ல பாக்டீரியாக்களும் நாசினி ஆகிவிடுகின்றன. இதனால் நமது கைகளுக்கே உரிய சிறப்பு குணங்களும் போய் விடுகின்றன. உதாரணத்துக்கு, இட்லி மாவு அரைத்து, கரைத்து வைத்தால் சரியாகப் புளிக்காது. ஈஸ்ட் குறைந்து மிருதுத் தன்மை போய் விடும். சானிடைசர் பயன் படுத்துவதால் நமது கைகள் எப்போதும் ஸ்டெர்லைஸ் நிலையில் இருப்பதால் காய்ச்சிய பாலில் நம் கைபட்டாலும் அது கெட்டுப் போகாது.

இன்னொரு புறம், சானிடைசர் கைகளால் அப்படியே நாம் உணவை உட்கொண்டால் சானிடைசரில் இருக்கும் ரசாயனங்கள் நமது வாய்ப் பகுதியிலிருந்து குடல் பகுதி வரை இருக்கும் மியூகோஸோ லேயரை (Mucoso Layer) அரித்து விடும். இந்த லேயர் இல்லா விட்டால் அல்சர் மற்றும் செரிமானப் பிரச்சினைகள் உண்டாகும். சாப்பிட்ட உணவு அடிக்கடி எதுக்களிக்கும்.

சானிடைசரில் இருக்கும் ஆல்கஹால், நமது ரத்தத்தின் அமிலத் தன்மையையே மாற்றி விடும். இதனால் உடலில் எதிர்ப்புச் சக்தி குறையவும் வாய்ப்பிருக்கிறது. அடிக்கடி நாம் சானிடைசரைப் பயன் படுத்துவதால் நமது உடலில் எப்போதும் நோய் எதிர்ப்புச் சக்தியை எதிர்க்கும் தன்மை நிரந்தரமாகி விடும் ஆபத்தும் இருக்கிறது. இந்த நிலை ஏற்பட்டால், நமக்கு வரும் நோய்களை எந்த

மருத்து கொடுத்தாலும் எளிதில் குணப்படுத்த முடியாது.

இதேபோல், குழந்தைகளுக்கு டயப்பர் அணிவிக்கும் தாய்மார்கள் அதை மாற்றும் போது சானிடைசர் பயன்படுத்தி குழந்தையைச் சுத்தப்படுத்துகிறார்கள். இப்படிச் செய்தால் கிருமிகள் அழிந்து விடும் என நினைத்தால் அது முற்றிலும் தவறு. இதனால் எக்ஸிமா என்ற தோல் வியாதி வர வாய்ப்பிருக்கிறது. மாய்ஸரைசரையும் சேர்த்துப் பயன் படுத்தினால் எக்ஸிமா வருவதை ஓரளவுக்குத் தவிர்க்க முடியும். அதேபோல், குழந்தைகளை ஈர்க்கும் வண்ணங்களிலும் சுண்டி இழுக்கும் வாசனைகளுடனும் சானிடைசர்கள் வருவதால் அவர்கள் அதை அடிக்கடி கைகளில் ஊற்றிக் கொண்டே இருக்கிறார்கள். இது குழந்தைகளுக்கு உடல் ரீதியாக அதிக பாதிப்புகளை ஏற்படுத்துவதாக மத்திய நோய்த் தடுப்பு அமைப்பு எச்சரித்திருக்கிறது.

சானிடைசர்களில் எத்தில் ஆல்கஹால் கலக்கப்படுகிறது. கரோனா காலத்தில் ஆல்கஹால் கலந்த சானிடைசரையே பயன்படுத்த வேண்டும். இந்த வகை சானிடைசர்களில் ட்ரைக்ளோசன் (Triclosan), ட்ரைக்ளோகார்பன் (Triclocarban) என்ற ஆன்டிபயாடிக் வேதிப்பொருட்கள் கலக்கப்படுகின்றன. இவை இரண்டும் மனித உடலுக்குள் அதிகமாகச் சென்றால் பெண்களுக்கு கருத்தரித்தலில் பிரச்சினை உண்டாகும்; கருவில் வளரும் குழந்தையின் வளர்ச்சியையும் பாதிக்கும்.

ஆல்கஹால் கலக்காத சானிடைசர்களும் இருக்கின்றன. ஆனால், அதிலும் பிரச்சினைகள் இருக்கின்றன. அந்த வகை சானிடைசர்களில் பைத்தாலேட்ஸ் (Phthalates) அல்லது பேராபின்ஸ் (Parabens) என்ற வேதிப்பொருட்களைக் கலக்கிறார்கள். இதுவும் நம் உடலுக்குள் சென்றால் ஹார்மோன் சுரப்பில் குழப்பம் உண்டாக்கி கருத்தரித்தலைப் பாதிக்கும்.

என்ன செய்ய வேண்டும்?

வெளியில் செல்பவர்கள் சானிடைசரைப் பயன்படுத்துவது அவசியம் தான். ஆனால், வீட்டுக்கு வந்ததும் சோப்புப் போட்டுக் கையை

ஒன்றுக்கு இரண்டு முறை கழுவிய பிறகு உணவுப் பொருட்களைக் கையில் தொடுங்கள். வீட்டிலேயே இருக்கும் தாய்மார்கள் சானிடைசரைப் பயன்படுத்த வேண்டிய அவசியமே இல்லை. அதற்குப் பதிலாக சோப்புப் போட்டு கையைக் கழுவுங்கள்; அதுபோதும்' என்று சொன்னவர், கடந்த நான்கு மாதங்களாக நோய் எதிர்ப்புச் சக்திக்காக மக்கள், சரியான அளவு தெரியாமல் மருந்துகளை உட்கொள்வது குறித்தும் விவரித்தார்.

'கரோனா தொடக்கத்தின் போது மக்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை உண்டாக்குவதற்காகத் தடுப்பு மருந்துகளைப் பரிந்துரைத்தார்கள். ஆனால், அதையெல்லாம் எந்த அளவில் எவ்வளவு நாளைக்குச் சாப்பிட வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் சிந்திக்காமல், மக்கள் இன்னும் அதைச் சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். மூன்று மாதங்களாக விடாமல் கபசுரக் குடிநீர் குடித்துக் கொண்டிருப்பதாக ஒரு பெண்மணி என்னிடம் தெரிவித்தார்.

கபசுரக் குடிநீர் உள்ளிட்ட கசாயங்களை தினமும் 20 முதல் 30 மி.லி. அளவு இரண்டு வாரங்களுக்குத் தொடர்ந்து எடுத்தால் போதும். அதன் பிறகு வாரத்தில் இரண்டு நாட்கள் இதே அளவு எடுத்தால் போதும். கபசுரக் குடிநீரில் கசப்புத் தன்மை அதிகம் இருப்பதால் இதை தொடர்ச்சியாக மாதக் கணக்கில் சாப்பிடுவது நல்லதில்லை.

மருந்தாக நினைத்து நாம் அளவுக்கதிகமாக எடுத்துக் கொள்ளும் விஷயங்களும் விஷமாகிவிடும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்' என்றார் மருத்துவர் தீபா.

வாசகர் குரல்



நமது சமுதாய மாத இதழான 24மனை குலமுரசு இதழ் கடந்த நான்கு மாதங்களாக வாட்ஸ்-அப் மூலம் வந்ததை வாசகர் அனைவரும் படித்து மகிழ்ந்தோம்.

இந்த ஆவணி மாத குலமுரசு இதழ் ஆசிரியரின் பெருமுயற்சியால் அச்சாக்கம் செய்த பொன்னிதழாக வெளியீடு செய்துள்ள ஆசிரியர் அவர்களை முதலில் வாசகர் அனைவரின் சார்பாக பாராட்டுகிறேன்.

விமான பயணத்தில் புதிய சாதனைப்புதுமை புரிந்துள்ள கேப்டன் ப்ரியவிக்னேஷ் மற்றும் ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி கனி பறித்துள்ள ஆற்றாளர் விஷ்னுசங்கர் ஆகியோர் தங்களது ஈடு இணையற்ற சாதனைகளால் நமது 24மனை தெலுங்கு செட்டியார்கள் சமுதாயத்திற்கு மாபெரும் பெருமை சேர்த்துள்ளார்கள். அவர்களின் பணி சிறக்க எனது வாழ்த்துக்கள்.

இந்த சாதனையாளர்களை நமக்கு அடையாளம் காட்டியது குலமுரசு இதழ் இல்லையா?, இவர்களை தெரிந்து, அறிந்து இதழில் வெளியிட்ட ஆசிரியர் திரு.Dr.துரை அங்குசாமி அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இதன் பொருட்டுதான் குலமுரசு இதழ் நாளும் வளர்ச்சி பெற்று மாதாமாதம் தங்கு தடையின்றி வெளிவர வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம் ஆகும்.

இந்த இதழில் 17விளம்பரங்களை அந்தந்த நிறுவனங்களை சேர்ந்த பெருமக்கள் அளித்து உதவியுள்ளார்கள். அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை பணிவுடன் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெங்களூரில் பல கல்வி நிறுவனங்களை நடத்தும், தலைவர் உயர்திரு.T.பாலகிருஷ்ணா போன்ற வசதி வாய்ப்பு பெற்றவர்கள் விளம்பரம் அளித்தால் குலமுரசு மேலும் வளர்ச்சி பெறும். ஆகவே, விளம்பரம் தந்து உதவ வேண்டுகிறேன்.

சென்னை திரு. V.கோவிந்தராஜன் அவர்கள் எழுதி அனுப்பிய 'கொரோனா விழிப்புணர்ச்சி' கட்டுரையை இதழில் வெளியிட்டது ஆசிரியரின் ஒரு அறிவார்ந்த செயலாகும்.

மக்களுக்கு பெரிதும் பயன் தரும் இந்த கொரானா தொற்று பற்றிய இக்கட்டுரையை எழுதிய நம் இனப்பிரமுகரை மனதார பாராட்டுகிறேன்.

- S.A.தண்டபாணி, தலைமைச்சங்க முன்னாள் பொதுச் செயலாளர், திருச்சி-01.

★ ★ ★

நமது 24 மனை குலமுரசு ஆகஸ்ட் 2020 இதழில் நமது இன கேப்டன் ப்ரியவிக்னேஷ் ஆகாய விமானத்தில் தமிழ் அறிவிப்பை செய்ததன் மூலம் விமானப் போக்குவரத்துத் துறையில் தமிழினமே தலையில் வைத்துக் கொண்டாடுகிறது என்பதையும் திரு விஷ்ணு சங்கர் 2019ம் ஆண்டுக்கான தேர்வில் தேர்ச்சி பெற்று நம் இனத்திற்கு பெருமை சேர்த்துள்ளார் என்ற முத்தான முக்கிய செய்திகளை தாங்கள் நமது குலமுரசில் வெளியிட்டதன் மூலம் நம் இன மக்கள் தெரிந்து கொள்ள செய்ததற்கு நன்றிகள் பற்பல மாமா.

- க.அங்கண்ணன், M.A.,M.Com MBA ML
வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்
மற்றும் பிற நீதிமன்றங்கள்.

★ ★ ★

பொதுமுடக்கத்தின் காரணமாக எல்லாம் செயலற்று நின்ற நிலையிலும் குலமுரசைத் தொடர்ந்து E-Magazine ஆக இணையதளத்தின் வழியே வெளியிட்டு சாதனை புரிந்தீர்கள். மீண்டும் அச்சில் வரும்போது விநாயகர் படத்தைப் போட்டுத் தொடங்கியுள்ளீர்கள். மங்களகரமான இந்த் மரபால் குலமுரசு மென்மேலும் வளர்ச்சி பெறும். வாழ்த்துக்கள்.

- ரமாதேவி மகேந்திரன்,
அபிராமபுரம்,சென்னை -18

★ ★ ★

